# உண்மையான அன்பு

அன்பர்களே!
ஆன்மீக சாதனையின் முடிவில் பரமாத்ம அனுபவம் பெற்றபின்,பக்தன் முழுமையான உண்மையான அன்பினை,அறத்தினை,சேவையினை உலகிற்கு அளித்து வாழ வேண்டும்.உண்மையான அன்பின் இலக்கணங்கள் பற்றிப் பேசினால்,இன்றைய காலத்து உறவுகளுக்குள் எத்தனை பேர் உண்மையான அன்பினைக் காட்டுகிறார்கள் என்பது உங்களுக்கே புரியும்.அதனால் மனம் நோக வேண்டாம்!நாம் எங்கே இருக்கிறோம்,நம்மை எப்படி மாற்றிக் கொள்கிறோம் என்ற ஆன்மீக பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

**க்ருஷ்ணாவதாரம் காட்டும் அன்பு:**
உண்மையான அன்பின் இலக்கணமே ''எவ்விதக் கட்டுப்பாடும்---எதிர்பார்ப்பும் இல்லாமல் வாழ்வது'' என்பதைக் கண்ணன் வாழ்ந்து காட்டினான்.அவன் பிறந்தது முதல் ஒரே ப்ரச்சனை தானே?யார் தான் அவனைச் சீண்டவில்லை?ஆனால் அவன் ஒரு போதும் மற்றவர்களை வெறுக்கவோ ஒதுக்கவோ இல்லை.காரணம்,அவன் யாரிடமும் எதையும் எதிர்பார்க்கவில்லை.

**கண்ணனை மிஞ்சிய ராதை:**
வட இந்தியாவில் கண்ணனை ராதையுடனே சேர்த்து வழிபடுகின்றனர்.ருக்மிணி,சத்யபாமா போன்ற பல திவ்யபட்ட மகிஷிகள் இருந்தும் ராதையே கண்ணனின் ஆத்மார்த்த சக்தியாய்,காதலியாய் சகலமுமாய் கொண்டாடப் படுகிறாள்.

ஆனால் அந்த ராதை வாழ்ந்த வாழ்க்கை முறையோ எதார்த்த வாழ்விற்கு எதிரானது.சதா கண்ணனையே எண்ணி வாழ்ந்தவள் ஏன் அவனை உலகறியக் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?குடும்பம் நடத்தவில்லை?அதற்கும் அவன் யார் என்ன கேட்டாலும் தருபவன் அல்லவா?கேவலம் மதுராவில் தன்னை விரும்பிய ஒரு பெண்ணுக்கு மகனைக் கூடக் கொடுத்தானே!பல ஆயிரம் பெண்கள் அவன் துவாரகையில் அவன் தேவியராய் வாழ்ந்தனரே!ஏன் இந்த ராதை மட்டும் அவனுடன் வாழவில்லை?

**அது தான் அவள் கண்ட பேரின்பப் பெறுவாழ்வு!!!**
*ராதை கண்ணனை சாதாரண மனிதனாகக் காணவில்லை.
*ராதை அவனைக் காதலால்,காமத்தினால் பரமாத்மாவாய் உணர்ந்து தெளிந்தாள்.
*அவன் யார் என்று உணர்ந்த ராதை,தனது ஜீவாத்ம தன்மையினையும் தெளிவுற உணர்ந்தாள்.
*தானும் அவனும் இருவேறு பொருளல்ல என்ற பேருண்மையினை உணர்ந்தாள்.
*தான் பெண்,தன் உடல்,ஆசைகள்,உணர்வுகள்,இச்சைகள்,சாதாரண வாழ்வு,மனைவி என்ற தகுதி,கல்யாணம்,குடும்பம்,பிள்ளைகள்,பொருள் போகம் என அனைத்தும் மாயை என்பதை உணர்ந்தாள்.
*தனக்கும் கண்ணனுக்கும் உள்ள அன்பு என்றும் எக்காலத்தும் எந்த நிலையிலும் அழிவில்லாதது,யாராலும் அழிக்க இயலாதது என்பதை ஆணித்தரமாக உணர்ந்து விடுகிறாள்.
*இந்த அனுபவத்தினைத் தான் ஆண்டாள் பிற்காலத்தில் அனுபவித்து,'' கோவிந்தா!உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது '' என்று திருப்பாவையில் பறைசாற்றுகிறாள்.
*கண்ணனை வெறும் உடலாகப் பாராமல் தன்னுள் தானாகவே பார்க்கிறாள்.,சதா கண்ணனாகவே தானே மாறி வாழ்கிறாள்.
*கண்ணனின் புல்லாங்குழல் ஒன்றே அவளுக்குப் போதுமானதாய் இருந்தது.ஒரு காலத்தில் கல்யாணத்தில் திருமாங்கல்யம் என்பதே இல்லை என்பர்.ஒரு கட்டத்தில் தம்பதியினருக்குள் நம்பிக்கை வலு இழந்த போது தான் அடையாளச் சின்னம் என மாங்கல்யம் வருகிறது.அந்த மாங்கல்யம் கூட எதிர்பார்ப்பின் அடையாளம் என்பது ராதையின் கொள்கை.
*கண்ணனும் தன் சக்தியாய் அவளை ஏற்று அவளைக் கொண்டாடினான்.

*ஆனால் ராதையை அவளுடைய பெற்றோரும் உறவுகளும் தோழிகளும் உடனே ஏற்றுக் கொண்டிருக்காது.அவள் அந்தச் சூழலில் இருந்து ஆன்மீக சாதனைகள் செய்து உயர்ந்த நிலையினை அடைந்தாள்.

வட இந்திய ஆச்சாரியர்கள் ராதையை நன்கு உணர்ந்து அவளை ஏற்றனர்,மக்களை வழிபட வைத்தனர்.

ஆனால் தென்னாட்டில் ஆச்சாரியர்கள் ராதையை வழிபாட்டில் புகுத்தவில்லை.அதற்காக ராதையை அவர்கள் ஏற்கவில்லை என்று அபத்தமாகக் கூறக் கூடாது.அக்கால தென்னாட்டுச் சமூகப் பண்பாடு--வாழ்க்கை----தனிமனித ஒழுக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ராதையை விடுத்து,முறையாக கண்ணன் கல்யாணம் செய்து கொண்ட ருக்மிணி போன்றோரை வழிபாட்டினுள் கொண்டு வந்தனர்.ராதையை வழிபாட்டில் இருந்து மறைப்பதால்,பல பேதை அப்பாவி ஏமாளிப் பெண்களுக்குக் குரல் கொடுத்துள்ளனர்.ஆனால் ராதை இவற்றுக்குஎல்லாம் அப்பாற்பட்டவள்.

ராதை உணர்ந்த பேரின்பமே பங்குனி உத்திர நாளில் தாயார் பெறுகிறாள்.அதைத் தானே பெருமாளும் அவளிடம் எதிர்பார்க்கிறார்.

**சீதை கண்ட பேரின்பம்:**
ராவண வதத்திற்குப் பின்னர் சீதையும் ராமனும் அயோத்தியில் இல்லறம் காண்கின்றனர்.ஆனால் காலத்தின் சூழலில் வண்ணான் ஒருத்தனின்குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்காக,தன் ராஜ தர்மத்தில் இருந்து வழுவாது தன் மனைவியை உலகத்தின் முன் விலக்கி வைத்து வாழ்கிறார்.இன்றைய சூழலில் இச்செயல் மிகவும் பரிதாபமான நிலையில் பலரால் பலபடி விமர்சனம் செய்யப்படுகிறது.

சீதையும் ராதை அனுபவித்த பேரின்பத்தினையே ராமனிடத்தில் அனுபவித்தாள்.அவளுக்கு ஏற்கனவே தெரியும் தான் உம் ராமனும் சமூகநலனுக்காக எப்போது வேண்டும் ஆனாலும் பிரிய நேரிடும் என்று.

ஏன் என்றால் அவர்கள் உடல், உயிர், பொருள், வாக்கு, செயல், பதவி, பட்டம், உறவு, போகம், உரிமை என அனைத்தையும் கடந்து உண்மையான அன்பால் பிணைந்து வாழ்ந்தனர்.உலகின் முன் அவர்கள் அழுதனர்,சிரித்தனர்,கதறினர்.ஆனால் ஆத்மானுபாவர்களாய் சதா பேரின்பம் கண்டனர்.

ஆனால் இவர்கள் ஒரு போதும் தங்கள் தர்மத்தினைக் கைவிட்டதில்லை.இதுவே அவர்களை வழிபட வைக்கிறது.

இக்காலத்தில் காந்தியும் அவர் மனைவியும் இந்த பேரின்ப வாழ்வினை வாழ்ந்து உள்ளனர் என்று கூற முடியும்.கணவன் -மனைவி என்றில்லை ,எல்லா உறவுகளும் இவ்வாறு அமைந்தால் உலகெங்கும் ஆனந்த அமைதிதான்.

**ஆண்டாள் கண்ணனிடல் கொண்ட அன்பும் இதுதானே?**
பங்குனி உத்திர நாளில் திருவரங்கதிவ்யத் தம்பதியினர் நடத்திக் காட்டும் வாழ்க்கை நாடகம் இது தான்.

அன்பு மக்களே!நம் நாட்டின் மிக உன்னதமான உறவுநிலை தம்பதிகள் உறவு ஆகும்.இந்த உறவுக்கே இலக்கணம் இவ்வாறு அமையப் பெறுகிறது என்றால்,நாம் உணர்ச்சிவசப்பட்டுக் கலங்கும் அல்ப சாதாரண விஷயங்களில் எப்படிப் பட்ட அனுபவமும் பக்குவமும் அவசியம் ஆகிறது அல்லவா?நாங்கள் சொன்ன இவ்விஷயங்களை முதலில் எண்ணிப் பார்க்கவே மனம் விடாது.ஆனால் மனதை ஆணவத்தின் பிடியில் இருந்து மீட்டு நலவாழ்வு வாழ இன்றுமுதல் பழகுங்கள்.

காந்திஜியை ஏன் ‘‘மஹாத்மா‘‘ என்கிறோம் தெரியுமா?அவர் மேற்சொன்ன ஆன்மீக சாதனைகளில் சதா வாழ்ந்தவர்.சுதந்திரம் பெற்ற தருணத்திலும் தன்னால் தான் அது கிடைத்தது என்ற தற்பெருமை கொள்ளாமல் ஆசிரமத்தில் அமைதியாக நூல் நூற்றவர்.பதவிகளை வேண்டாம் என்றவர்.நாமும் முயன்றால் மஹாத்மா ஆகலாம் .இனி உலகமே இந்தியாவைப் பார்க்கும் ராமர் பாலம் பற்றிப் பேசும் நேரம் வந்துவிட்டது.வாருங்கள் உத்திர மண்டபத்துக்குச் செல்வோம்.